Before the Court of Chief Judicial Magistrate cum Special Judge, Kanniyakumari

**FIRST INFORMATION REPORT** **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section ~~154 Cr.P.C~~) 173 BNSS

(~~கு.ந.வி.தொ.பிரிவு 154~~ இன் கீழ்)

C 8167267

1. District : மாவட்டம் Kanyakumari | PS: காவல்நிலையம் V&AC Nagercoil | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 9/2024 | Date: நாள் 13.12.2024

2. (i) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 167, 409, 467, 468, 477-A

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: The PC Act 1988 (Amended in 2018) — Sections பிரிவுகள்: 13(2) r/w 13 (1) (a)

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2018 — Date to : நாள் வரை 2020

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.12.2024 — Time : நேரம் 11.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.12.2024 — Time : நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Thoothur Village Panchayat Approx. 43 Km North West

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T T Rema — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Rustin Thomas

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 08.05.1976 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Inspector of Police — (g) Address : முகவரி Vigilance & Anti-Corruption, Kanyakumari Detachment @ Nagercoil

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tr. D.Joel Singh, S/o Tr.Devadhason,**
**Over Head Tank Operator/Water Supply Attender,**
**Thoothur Village Panchayat, Kanyakumari District**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரி:
திரு.D.ஜோயல்சிங்,
த/பெ.திரு,தேவதாசன்,
மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் /குடிநீர் உடனாளர்,
தூத்தூர் ஊராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 13.12.2024-ம் தேதி 10.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் T.T.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பாணை V.R.No.26/2023(12423) RDP/KK Dt.02.12.2024 மற்றும் அதனோடு இணைக்கப்பட்டிருந்த, மார்ஜினில் கண்ட எதிரி மீது விசாரணை மேற்கொள்ள தகுதி வாய்ந்த அலுவலர்களால் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 பிரிவு.17A-ன்படி வழங்கப்பட்ட உத்தரவு ஆகியவற்றின் அடிப்படையில் மார்ஜினில் கண்ட எதிரி திரு. D.ஜோயல் சிங் என்பவர் மீது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2024 சட்ட பிரிவுகள் 167, 409, 467, 468, 477-A IPC மற்றும் 13(2) r/w 13 (1) ( a ) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 -ன் படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் Tmt.C.Sivasankari….. பதவி Inspector……… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.12.2024 13.00 hrs

Name: பெயர் ……T T Rema……
Rank: நிலை ……Inspector of Police…… No. எண் ……
V & AC
Kanyakumari Dist.

**Continuation of Column No.12 of FIR in Kanyakumari V&AC Cr.No.9/2024.**

குற்ற அலுவலா் திரு.D.ஜோயல்சிங், மேல்நிலை நீா்தேக்க தொட்டி இயக்குபவா்/குடிநீா் உடனாளா், தூத்தூா் ஊராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என்பவா் 01.03.2009-ம் தேதி முதல் தூத்தூா் ஊராட்சியில் மேல்நிலை நீா்தேக்க தொட்டி இயக்குபவா்/குடிநீா் உடனாளராக பணிபுரிந்து வருகிறாா்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 95 ஊராட்சிகள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. மேற்படி ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றான முன்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 11 ஊராட்சிகளில் தூத்தூா் ஊராட்சியும் ஒன்றாகும். தூத்தூா் ஊராட்சியில் சுமாா் 4711 குடும்பங்கள் வசித்து வருகின்றனா். தூத்தூா் ஊராட்சியில் மொத்தம் 15 வாா்டுகள் உள்ளன. பொதுவாக ஊராட்சியில், மக்களுக்கு சுகாதாரமான குடிநீா் இணைப்பு வழங்கல் மற்றும் பராமரித்தல், தெருவிளக்கு வசதி, சாலை வசதி மற்றும் கழிவு நீா் ஓடை அமைத்து சுகாதாரம் பேணுதல், கட்டிட அனுமதி வழங்குவது மற்றும் அரசால் அறிவிக்கப்படும் நலத்திட்டங்களை செயல்படுத்துவது போன்ற முக்கியமான வேலைகள் ஊராட்சி தலைவா்/தனி அலுவலா் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல ஊராட்சி அலுவலக நிா்வாகத்தை கவனிப்பது, வரி வசூலித்தல், வசூல் செய்யும் பணத்தை சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவு செய்து அந்த தொகையை வங்கியில் செலுத்துதல், பட்டியல் தயாா் செய்வது, பதிவேடுகளை பராமரித்தல், போன்றவை ஊராட்சி செயலரின் தலையாய பணிகளாகும். ஊராட்சிக்கு உட்பட்ட மேல்நிலை நீா்த்தேக்க தொட்டிகளில் குடிநீரை நிரப்புவது மற்றும் பாதுகாப்பான குடிநீரை கிராம குடியிருப்புகளுக்கு பகிா்ந்தளிப்பது ஆகிய பணிகளை மேல்நிலை நீா்த்தேக்க தொட்டி இயக்குபவா்கள் மேற்கொள்கின்றனா்.

ஊராட்சியில் கட்டிட வரைபட அனுமதி கட்டணம், குடிநீா் இணைப்பு கட்டணம், ஒப்பந்த நமுனா கட்டணம், ஒப்பந்த வைப்புத்தொகை கட்டணம் ஆகியவை பலவகை ரசீது மூலம் ஊராட்சி செயலரால் வசூல் செய்யப்பட்டு இந்த தொகையானது படிவம் 7-ல் அதாவது தினசரி வசூல் பதிவேட்டில் தேதி, ரசீது எண், வரவின் தலைப்பு மற்றும் தினசரி வசூலான மொத்த தொகை என பதிவு செய்யப்பட்டு பின்னா் படிவம்-9 சிட்டாவில் வீட்டு வரி, தொழில்வரி, பலவகை வரவு, தண்ணீா் வரவு சம்மந்தமான தலைப்புகளில் சுருக்கமாக எழுதி மொத்தம் கணக்கிடப்பட்டு பின்னா் படிவம்-11 ரொக்க பதிவேட்டில் மொத்த தொகையையும் ஊராட்சி செயலரால் வரவு வைக்கப்பட்டு, ஊராட்சி தலைவா்/தனி அலுவலரால் சரிபாா்க்கப்பட்டு சுருக்கொப்பம் இடப்பட்டு கணக்கு முடிக்கப்படும். மேற்படி தொகையானது தினசரி வங்கியில் செலுத்தப்பட வேண்டும். வங்கியில் செலுத்தப்பட்ட தொகையை வங்கி பாஸ்புத்தகத்தில் தினசரி பதிவு செய்து வாங்க வேண்டும். கட்டிட வரைபட அனுமதி கட்டணமானது பலவகை ரசீது புத்தகம் மூலம் வசூல் செய்யப்பட்டு அசல் ரசீதானது சம்மந்தப்பட்ட நபா்களுக்கு

வழங்கப்படும். நகல் ரசீதானது அடிக்கட்டையுடன் ஊராட்சி செயலரால் ஊராட்சியில் ஒப்படைக்கப்படும்.

ஊராட்சிக்கு உட்பட்டவர்கள் கட்டிட வரைபட அனுமதி பெற வேண்டுமானால் ஊராட்சியில் உரிமம் பெற்ற வரைபடம் தயார் செய்யும் நபரிடமிருந்து வீட்டிற்கான வரைபடம் தயார் செய்து அத்துடன் விண்ணப்பம், அனுபந்தம் மற்றும் இணைப்பு ஆவணங்கள் ஆகியவைகளை இணைத்து ஊராட்சியில் சமா்ப்பிக்க வேண்டும். ஊராட்சி செயலா் அதை சரிபார்த்து வரைபட அனுமதி பதிவேட்டில் பதிவு செய்து, பின்னா் சம்மந்தப்பட்ட இடத்தை ஆய்வு செய்து அதற்கான கட்டணத்தை நிர்ணயித்து ஊராட்சி தலைவா்/தனி அலுவலரிடம் சமா்ப்பிக்க வேண்டும். ஊராட்சி தலைவா்/தனி அலுவலா் அனுமதி வழங்கியவுடன் சம்மந்தப்பட்ட நபரிடமிருந்து அதற்கான கட்டணத்தை பெற்றுக்கொண்டு பலவகை ரசீது புத்தகத்தில் உரிய நபரின் கையொப்பம் பெற்று வரிவசூலிப்பவரின் கையொப்பமும், ஊராட்சி தலைவா்/தனி அலுவலரின் சீலையும் வைத்து அசல் ரசீதினையும், ஊராட்சி தலைவா்/தனி அலுவலரின் அனுமதி ஆணையுடன் கட்டிட வரைபடத்திலும் ஊராட்சி தலைவா்/தனி அலுவலரின் கையொப்பம் பெற்று சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும். கட்டணம் வசூலித்தமைக்கு மேற்கூறியவாறு உரிய பதிவேடுகளில் வரவு வைத்து, அவ்வாறு வசூலிக்கப்பட்ட பணமானது தினசரி வங்கியில் செலுத்தபட வேண்டும்.

விழிப்பு அறிக்கை விசாரணை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் தூத்தூா் ஊராட்சியில் மேல்நிலை நீா்தேக்க தொட்டி இயக்குநா்/குடிநீா் உடனாளராக பணிபுரிந்த குற்ற அலுவலா் திரு.D.ஜோயல்சிங் என்பவா் வீடுகளுக்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி விண்ணபிக்கும் விண்ணப்பதாரா்களிடமிருந்து விண்ணப்பம், அனுபந்தம், வீட்டிற்கான வரைபடம் மற்றும் இணைப்பு ஆவணங்கள் ஆகியவைகளை தானே பெற்றுக்கொண்டு அதை ஊராட்சி செயலரிடமோ அல்லது தனி அலுவலரிடமோ ஒப்படைக்காமல் தன்வசம் வைத்திருந்து, விண்ணப்பதாரரிடமிருந்து அதற்கான கட்டணத்தை பெற்றுக்கொண்டு, அவா்களில் சிலருக்கு மட்டும் ரசீது வழங்காமலும், பலருக்கு அதற்கு போலியான பலவகை ரசீது வழங்கியும், அந்த ரசீதில் வரி வசூலிப்பவா் என்னுமிடத்தில் தனது கையொப்பத்தினை இட்டும், மேலும் ஊராட்சி தனி அலுவலரின் **அனுமதி ஆணையை போலியாக தயாரித்தும்**, கட்டிட வரைபடத்திலும் ஊராட்சி தனி அலுவலரின் **கையொப்பத்தினை போலியாக இட்டும்** விண்ணபத்தாரா்களிடம் வழங்கியுள்ளாா். மேலும் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலித்த **ரூ.1,19,672/-** தொகையை ஊராட்சி பதிவேடுகளில் பதிவு செய்யாமலும், அந்த தொகையை ஊராட்சியின் வங்கி கணக்கில் செலுத்தாமலும் நம்பிக்கை மோசடி செய்து, அரசாங்கத்தை ஏமாற்றி, அரசு ஊழியா் என்ற கடமை தவறி, பணத்தை கையாடல் செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளாா்.

தூத்தூா் ஊராட்சியில் வசிக்கும் கீழ்காணும் விண்ணப்பதாரா்களிடமிருந்து கட்டிட வரைபட அனுமதிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் கட்டணத்தை பெற்றுக்கொண்டு அவா்களில் சிலருக்கு ரசீது மட்டும் வழங்காமலும், பலருக்கு

போலியான பலவகை ரசீது வழங்கியும், மேலும் விண்ணப்பதாரர்களுக்கு போலியான அனுமதி ஆணை மற்றும் கட்டிட வரைபடத்திலும் ஊராட்சி தலைவர்/தனி அலுவலரின் கையொப்பத்தினை போலியாக இட்டும் வழங்கியுள்ளது தெரிய வருகிறது.

| வ. எண் | பெயர் & முகவரி | பலவகை ரசீது எண் & தேதி | அனுமதி ஆணை எண் & தேதி | தொகை |
|---|---|---|---|---|
| 1. | சவரியார்,<br>காருண்யபுரம்,<br>பூத்துறை. | ரசீது வழங்கவில்லை | 17/2018-19<br>31.12.2018 | 15,282 |
| 2. | சிபி,<br>த/பெ.சூசைநாயகம்,<br>ஆஸ்பத்திரி அருகில். | 301996<br>27.07.2018 | 37/2018-19<br>23.07.2018 | 28,290 |
| 3. | ரமலிதாஸ்,<br>த/பெ.பென்சிகர்,<br>காருண்யபுரம். | 302131<br>05.11.2019 | 19/2019-20<br>05.11.2019 | 22,360 |
| 4. | பெனி,<br>பிரயர் சென்டர் விளாகம்,<br>இரவிபுத்தன்துறை. | 302140<br>20.11.2019 | 25/2019-20<br>20.11.2019 | 25,200 |
| 5. | மரிய ஆன்றணி,<br>த/பெ.வர்க்கீஸ்,<br>காருண்யபுரம்.<br>பூத்துறை. | ரசீது வழங்கவில்லை | 40/2019-20<br>05.12.2019 | 28,540 |
| | | மொத்தம் | | **1,19,672** |

ஆனால் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் தூத்தூர் ஊராட்சியில் பலவகை ரசீது புத்தக எண்கள், ரசீதுகள் மற்றும் வரைபட அனுமதி ஆணை பதிவேட்டில் அனுமதி வழங்கப்பட்ட விபரங்கள் கீழ்கண்டவாறு காணப்படுகிறது.

1. 2018-19-ம் ஆண்டு தூத்தூர் ஊராட்சியில் பலவகை ரசீது புத்தகம் எண் 6022-ல் ரசீது எண்கள் 301051 முதல் 301100 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. 2019-20-ம் ஆண்டு தூத்தூர் ஊராட்சியில் பலவகை ரசீது புத்தகம் எண்கள் 6023, 6024 மற்றும் 6025-ல் ரசீது எண்கள் முறையே 301101 முதல் 301150, 301151 முதல் 301200 மற்றும் 301201 முதல் 301250 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. 2018-19-ம் ஆண்டு தூத்தூர் ஊராட்சியில் வரைபட அனுமதி ஆணை பதிவேட்டில் எண்கள் 01 முதல் 03 வரை வழங்கப்பட்டுள்ளது.

4. 2019-20-ம் ஆண்டு தூத்தூர் ஊராட்சியில் வரைபட அனுமதி ஆணை பதிவேட்டில் எண்கள் 01 முதல் 17 வரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே குற்ற அலுவலர் இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 167, 467, 468, 477-A, 409 படியும், ஊழல் தடுப்பு சட்டப் பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(a) படியும் தவறிழைத்ததற்கான முதல் நோக்கு வழக்கிற்கான ஆதாரம் உள்ளது. மேலும், இவ்வழக்கில் மேற்கூறிய கால கட்டத்தில், இது போன்று கூடுதல் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்று கண்டறிய வேண்டியுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/2024 இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 167,409,467,468,477-A-படியும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்டப்பிரிவு 13(2) உ/இ 13(1)(a)-படியும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் தலைமை அலுவலக உத்தரவு விழிப்பு அறிக்கை எண் 26/2023(12423) RDP/KK dated 02.12.2024 படி இன்று 13.12.2024-ம் தேதி 12.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

முதல் தகவலறிக்கையின் அசலை கனம் தலைமை குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவலறிக்கையின் ஒரு நகலினை புலன்விசாரணை அலுவலருக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Rema
13/12/2024

[T.T. Rema]
Inspector of Police
V&AC, Kanniyakumari
Detachment @
Nagercoil.